# வானவில்

VAANAVIL
ISSUE – 50 FEBRUARY 2015

இதழ் - 50 மாசி 2015


# நல்லாட்சி என்ற பெயரில் ஜனநாயக விரோத நாசகார நடவடிக்கைகள் ஆரம்பம்!




2015 ஜனவரி 08இல் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவாகி, அவர் அவசர அவசரமாக ஐக்கிய தேசியத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தனது விருப்பப்படி ஒருதலைப்பட்சமாக பிரதமராக நியமித்து, ரணில் தனக்கென ஒரு மந்திரிசபையையும் நியமித்து, ஒரு அரசாங்கத்தையும் அமைத்த பின்னர், நாடு ஜனநாயக விரோத – அழிவுப் பாதையில் வேகமாகச் செல்வதைக் காண முடிகிறது.

புதிய ஜனாதிபதியின் முதலாவது ஜனநாயக விரோதச் செயல்பாடு, ஏற்கெனவே பெரும்பான்மையுடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் ஒன்று பதவியில் இருக்க, அந்த அரசாங்கத்தைக் கலந்து ஆலோசிக்காமல் புதிய அரசாங்கம் ஒன்றை அமைத்தது. அதுவும் புதிய ஜனாதிபதியின் சொந்தக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கம் இருக்கத்தக்கதாக, பாராளுமன்றத்தில் மிகச் சிறுபான்மையாக இருந்த ஐ.தே.கவின் ஆட்சியை அமைக்க ஏற்பாடு செய்தது, மைத்திரிபால சிறிசேன நாட்டின் ஜனநாயக மரபை மீறியது மட்டுமின்றி, தனது சொந்தக் கட்சிக்கே துரோகம் இழைத்ததும் ஆகும்.

மறுபக்கத்தில் ஜனநாயகம் பற்றி உரத்துப் பேசிக்கொண்டு, உலக ஜனநாயக கட்சிகளின் அமைப்பிலும் அங்கம் வகிக்கும் ரணில் விக்கிரமசிங்க, பதவிக்கு ஆசைப்பட்டு அல்லது சர்வதேச எஜமானர்களின் தேவையை நிறைவேற்றுவதற்காக அல்லது இரண்டுக்குமாக பிரதம மந்திரிப் பதவியை ஏற்றதின் மூலம் ஜனநாயகத்தை பெரும் கேலிக்கூத்தாகியுள்ளார்.

இந்த இருவரும்தான், அதாவது புதிய ஜனாதிபதியும் பிரதமரும் தான் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தாம் தேர்தலில் வென்றால் 100 நாட்களுக்குள் சர்வாதிகாரத்தனமான நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக மக்கள் முன் சென்று பிரச்சாரம் செய்தவர்கள். ஆனால் அவர்களே தேர்தல் நடந்து 48 மணித்தியாலங்களுக்குள் அதே நிறைவேற்று அதிகார முறையை ஜனநாயகத்தை ஒழித்துக்கட்டுவதற்காகப் பிரயோகித்துள்ளனர்.

அதுமாத்திரமல்ல, முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவை முன்னைய அரசு நீக்கியதில் பலருக்குக் கருத்து முரண்பாடுகள் இருப்பினும், அவர் மீது சட்டவழியில் பாராளுமன்றத்தில் தகுதியீனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டே பதவி இழந்தார். ஆனால் நாட்டின் அதியுயர் இறைமையுள்ள நிறுவனமான

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க..

# மோசமான காலம்

இந்த வருடம் ஜனவரி 8ந் திகதி நிகழ்ந்த ஜனாதிபதி தேர்தலையடுத்து இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத புதிய அரசியல் சூழல் ஒன்று உருவாகியுள்ளது. இலங்கை ஜனாதிபதி முறைமையின் நிறைவேற்று அதிகாரத்தில் 'பெண்ணை ஆணாக்க முடியாது, ஆணைப் பெண்ணாக்க முடியாது' என்பது தவிர்ந்த சகல அதிகாரங்களும் இருக்கின்றதென, அதனை உருவாக்கிய ஜே.ஆர். ஜெயவர்தனா கூறியதை மெய்ப்பிக்கும் வண்ணம் நாளுக்கு நாள் காரியங்கள் நடந்தேறிய வண்ணமுள்ளன. ஆனால் தற்போதைய ஜனாதிபதி, தான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால், 'நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பேன்'என்பதை பிரதான கோசமாக முன்வைத்தே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இப்போது தேர்தலில் வெற்றியீட்டியவுடன், அவர் இரண்டாந்தடவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமாட்டேன் என்பதை மாத்திரமே கூறியிருக்கிறார். இன்னுமொரு 6 வருடத்திற்கு இவரே நிறைவேற்று அதிகாரத்தின் இதுவரையும் தொடப்படாத சகல சரத்துகளையும் அமுல்படுத்தப் போகிறார் என்பதே இதன் உள்ளடக்கம்.

திருப்பித்திருப்பி சொல்லவேண்டிய இன்னுமொரு விடயமென்னவெனில், சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலளாராக இருந்து, அக்கட்சியிலிருந்து நீக்கப்பட்ட, தற்போதைய ஜனாதிபதி, சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராகியுள்ளார். இவர் கட்சி சார்பின்றி (ஆனால் சில கட்சிகளின் ஆதரவுடன்) ஜனாதிபதி தேர்தலில், முன்னைய ஜனாதிபதியும் முன்னைய சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவருக்கும் எதிராக பொது வேட்பாளராக போட்டியிட்டு வென்றுள்ளார். 2010இல் நடந்த பாராளுமன்ற தேர்தலில் இலங்கையின் பெரும்பான்மை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை பதவி நீக்கம் செய்யக்கோராது அல்லது பாராளுமன்றத்தை கலைக்காது புதிய அரசாங்கம் நியமிக்கப்பட்டுள்ளது. அதாவது பாராளுமன்ற தேர்தலொன்றினை நடத்தாது, பாராளுமன்றத்தில் பெரும்பான்மையும் இல்லாமல் பிரதமரும் மந்திரிசபையும் புதிய ஜனாதிபதியின் முன்னிலையில் பதவியேற்றுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக நிறுத்தப்படலாமெனக் கருதப்பட்ட பலரில் ஒருவரான முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, புதிய பிரதமர் உரிய முறையில் நியமிக்கப்படவில்லையெனப் பகிரங்கமாக கருத்து வெளியிட்டுள்ளார். அரசியல் அமைப்பின்படி பதவியிலுள்ள பிரதமரை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்தாலன்றி அவர் பிரதமர் பொறுப்பை கொண்டவராவரெனவும், அரசியல் அமைப்பின் 8Iவது சரத்தின் பிரகாரம் கட்டாயமாக எழுத்து மூலமாக பதவி நீக்கம் செய்யப்பட்டதாக அறிவித்த பின்னரே புதிய பிரதமர் நியமிக்கப்படலாம், ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லையெனவும் அவர் கூறியுள்ளார். இவரது கூற்றின்படி, தற்போது இலங்கையில் இரு பிரதமர்கள் உள்ளார்கள் என்பதே அர்த்தம்.

ஜனாதிபதித்தேர்தலில் ஏறத்தாள வடக்கில் 76 வீதமான வாக்குகளையும் கிழக்கில் 70 வீதமான வாக்குகளையும் பெற்றே புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதனால் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு சாதகமாக செயற்படுவது போலவும், அதே நேரத்தில் அவ்வாறு செயற்பட்டு இலங்கை பெரும்பான்மை இனத்தவரின் தப்பெண்ணங்களுக்கு உள்ளாகமலிருக்க வேண்டிய ஒரு நிலையில் புதிய ஜனாதிபதியும் அவரது அரசும் உள்ளனர். இதனால்தான் என்னவோ ஓமந்தையிலிருந்த இராணுவச்சோதனை சாவடியை அகற்றப்படுகின்றது என்ற அறிவிப்பையும் இராணுவத்திற்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பையும் அடுத்தடுத்து வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி சிறீலங்கா சுதந்திரக்கட்சி தலைவராக இருந்தாலும், தற்போதைய அரசு சிறீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலானதல்ல, ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலானது என்பதே உண்மை. சிறீலங்கா சுதந்திரக்கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிகின்றது. இக்கட்சியினர் அரசியல் ரீதியான கருத்து வேறுபாடுகள் காரணமாக இல்லாமல் தங்களுக்குள்ள குழு மோதல்களால்தான் பிரிந்துள்ளார்கள். இக்கட்சியினரை பிரதானமாகக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருந்தும், சட்டத்திற்கு புறம்பான வகையில் நியமிக்கப்பட்ட ஐ.தே.க. தலைமையிலான அரசை கலைக்கும் வகையிலான எந்தவித முயற்சிகளும் எடுக்காது இருப்பதே இவர்களிடையேயான பிளவை கோடிட்டுக் காட்டுகின்றது.

புதிய அரசின் நூறு நாட்கள் திட்டம் ஐ.தே.கவினர் தயாரித்ததே. அடுத்து வரப்போகும் பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னர் இத்திட்டத்தில் கூறப்பட்டவற்றை செயற்படுத்தி ஐ.தே.க. மக்களின் ஆதரவை தம்வசப்படுத்த முனைகின்றது. அதனால் இந்த மோசமான காலம் நூறு நாட்களின் பின்னரும் தொடரும் ஆபத்தினை குறைத்து மதிப்பிட முடியாது.
*

---

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

# மதம் பற்றிய இரு நாத்திகவாதப் பார்வைகள்




பண்டிட் ஜவகர்லால் நேரு அவருடைய கட்டுரை ஒன்றில் கூறுகிறார் "மதவாதிகள் என்னை மன்னிப்பார்களாக. மதங்களினால் நன்மை உண்டு என்று எவ்வளவுதான் கூறினாலும் அவை இழைத்த தீமைகளே அதிகமாக உள்ளன". நேருவின் இந்தக் கருத்து மறுக்க முடியாத ஒன்றுதான். மதங்களின் வரலாறு கறைபடிந்த ஒன்றுதான் என்பது உண்மை. மிகப்புராதன காலத்தில் மனிதன் மதத்திற்காகப் போராடினான் என்பதற்கு ஆதாரம் இல்லை. ஆனால் ஒரு இனக்குழுவின் தெய்வங்கள் மற்றொரு இனக்குழுவால் கேவலப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதற்குப் பழங்கால குகை ஓவியங்களும், இன்றைய கிராமிய தெய்வ உருவங்களும் சாட்சி பகர்கின்றன. வரலாறு தெரிந்த காலந்தொட்டு மதங்கள் ஒன்றுடன் ஒன்று தடியெடுத்துப் போராடியே வந்துள்ளன.

இந்தியாவில் நிகழ்ந்த மதப்போராட்டங்களுக்கு அளவே இல்லை. புகழ்பெற்ற நாளந்தாப் பல்கலைக்கழகத்தைச் சநாதன இந்து மதவாதிகள் தீக்கிரையாக்கினர் என்பது வரலாற்றின் பின்னணிச் செய்தியாகும். தமிழகத்தில் சைவர்கள் - வைணவர்கள் சண்டை, சமணர்களைக் கழுவேற்றிய நிகழ்ச்சி ஆகியன உலகறிந்த விசயம். மகேந்திரவர்மன் எழுதிய "மத்த விலாசப் பிரகசனம்" என்ற நாடகம் அவன் காலத்திய மதங்களிடையே உள்ள பூசல்களைக் கிண்டல் செய்வதாக அமைந்துள்ளது. இவை யாவும் மதங்களின் வரலாறு நமக்குக் காட்டும் உண்மைகள்.

இதன் காரணமாக மதத்தைப் பற்றிய பார்வைகள் உருவாயின. இவற்றில் ஒன்று மதத்தை அடியோடு ஒழித்து விட வேண்டும் என்பது. இவ்வாறு மதத்தை அடியோடு ஒழித்துவிட முடியுமா? என்ற எதிர் கேள்வியும் கேட்கப்படுகிறது. இத்தகைய நிலையில் மார்க்சிசம் எந்த விளக்கத்தை அளிக்கிறது என்பது நாம் அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

மார்க்சிசத்தின் ஒரு அம்சம் நாத்திகவாதம். மதத்தை எதிர்பவர்கள் நாத்திகவாதிகளாக இருக்கின்றனர். இவர்கள் கடவுள் எதிர்ப்பு, சமய எதிர்ப்பு என்பதை மட்டுமே முழுக் கொள்கையாகக் கொண்டுள்ளனர். இவர்கள் எந்தக் கட்டத்திலும், எக்காலத்திலும் மத எதிர்ப்பு என்பதை விடாப்பிடியாகப் பின்பற்றுகின்றனர். இவர்கள் பூர்சுவா நாத்திகவாதிகள் ஆவர். மதத்தின் அடிப்படைகள், அது எவ்வாறு தோன்றியது, அது ஒவ்வொரு காலத்திலும் என்ன பங்கைப் பெற்றுள்ளது என்பன போன்ற கேள்விகளைக் கேட்காமல், அதன் குறைகளையே சாடும் விமர்சன பாணி இவர்களுடையது.... இவர்களின் பிரச்சாரங்கள் ஒரு கருத்தை மற்றொரு கருத்தால் எதிர்க்கும் போராட்டம் ஆகும். இது கருத்து முதல்வாத எதிர்ப்பு ஆகும்.

ஆனால் மார்க்சிச நாத்திகவாதம் என்பது வேறு கோணத்தில் இருந்து இப்பிரச்சினையை அணுகுகிறது. மதத்திற்கும் மற்ற சமூக நிறுவனங்களுக்கும் (அரசியல், கலை, கல்வி, பொருளாதார அமைப்புகள்) உள்ள உறவுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்கு எதிரான போராட்டத்தினை நடத்த வேண்டும் என்று மார்க்சிசம் கூறுகிறது.

மதத்தைப் பற்றி மார்க்சிசம் வெறும் நாத்திகவாதக் கோணத்தில் ஒரு கருத்தமைப்பை உருவாக்கவில்லை. மதம் ஒரு சமூக நிறுவனம். அது மேற்கோப்பின் ஒரு பகுதி. அடிப்படையைப் பிரதிபலிக்கும் பல்வேறு கருத்துருவங்களில் அது ஒன்று. எனவே மதத்தை மார்க்ஸ் வரலாற்று ரீதியான ஆய்வுக்கு உட்படுத்தினார். அதன் தோற்றம், அதன் வளர்ச்சி, அதன் தன்மை ஆகியவற்றை மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் ஆகியோர்

விரிவாக ஆராய்ந்துள்ளனர். இதன் விளைவாக அவர்கள் மதம் பற்றிய மார்க்சிய அணுகுமுறையை உருவாக்கியுள்ளனர்.

மார்க்சிசப்படி மதத்தை எதிர்த்துப் போராடுவது என்பது தொடர்ந்து இடம்பெற வேண்டும். ஏனென்றால் அது துவக்க காலத்தில் மனிதனின் அறியாமை காரணமாகத் தோன்றிய ஒன்று. பின்னர் சமூகங்கள் வர்க்கங்களாகப் பிளவுண்ட பொழுது அது ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாக்கும் சாதனமாக மாறியது மதம்... கோடிக்கணக்கான மக்கள் அதைப் பின்பற்றுகின்றனர். அவ்வாறாயின் அதற்குரிய காரணங்கள் என்ன? அதைத் தூக்கி எறிய முடியுமா? என்ற கேள்வியையும் மார்க்சிசம் கேட்கிறது. சுத்தமான மத எதிர்ப்புவாதிகளைப் போன்று அல்லாமல், மார்க்ஸ் மதத்தின் மற்றொரு தன்மையையும் சுட்டிக் காட்டுகிறார். எந்த மதம் அடக்குமுறைச் சாதனமாக விளங்குகிறதோ, அதே மதம் ஏழைகளின் மனத்தாங்கல்களை வெளிப்படுத்தும் கருவியாகவும் பயன்படுகிறது என்பது மார்க்சியம். அதை மக்களின் பெருமூச்சு என்கிறார் மார்க்ஸ். வெளியில் கூறமுடியாத சோகம் மனதில் மண்டிக் கிடக்கும் பொழுது அதை மனிதன் பெருமூச்சு மூலம் வெளிப்படுத்திக் காட்டுகிறான். அத்தகைய ஒரு சாதனமாக மதம் மக்களுக்குப் பயன்படுகிறது. இந்த நிலையில் மதத்தை எதிர்ப்பதை விட, அதை ஆராய்வது நல்லது என்கிறார் மார்க்ஸ். இந்தக் காரணத்தினால் மதத்தை முற்றிலுமாகத் துடைத்து எறிவது கடினமான செயல் என்கிறார் மார்க்ஸ்.

எனவே மதத்திற்கு எதிரான போராட்டத்தை அதன் சகல பரிமாணங்களையும் கண்டு உணர்ந்து நிகழ்த்த வேண்டிய ஒன்று என்று மார்க்சிசம் கூறுகிறது. இது இயங்கியல் ரீதியாக மதத்தை அணுகும் முறையாகும். இதைத் தெரிந்து கொண்ட மார்க்சியவாதி எப்பொழுது மதத்தை எதிர்க்க வேண்டும், என்ன முறையில் எதிர்க்க வேண்டும் என்பதைச் சூழ்நிலைக்கு ஏற்ப உருவாக்க வேண்டும்.

மார்க்சிசத்திற்கும் மதத்திற்கும் உள்ள விவாதங்களில் ஒன்று, மதம் அடிப்படையின் பிரதிபலிப்பு என்பதாகும். சமூக அடிப்படைதான் மதத்திற்கு ஆதாரமாக உள்ளது. இந்த அடிப்படை மாறும் பொழுது மதம் மாறுகிறது. நிலப்பிரபுத்துவ காலத்தில் மதம் சர்வாதிகார சக்தியாக விளங்கியது. அதன் கட்டளைகளை மக்கள் மூடத்தனமாகவும் வலுக்கட்டாயமாகவும் பின்பற்றினர். ஆனால் முதலாளித்துவ சமூகம் தோன்றிய பின்னர் மதத்தின் தன்மையில் மாறுதல் ஏற்பட்டது. அது ஜனநாயகப்படுத்தப்பட்டது. சமத்துவம் என்ற கருத்து அதில் வலுப்பெற்றது. இந்த மாறுதல்கள் சமூக மாறுதல்களால் ஏற்பட்டவை ஆகும். எனவே மதத்திற்கு அடிப்படையான சமூகம் முற்றிலுமாக மாறும் பொழுது அல்லது திட்டமிட்ட முறையில் மாற்றப்படும் பொழுது அதன் ஆணிவேர்கள் கருகிவிடுகின்றன. பின்னர் அது சிலகாலம் பழங்காலச் சின்னமாக இயங்கி உதிர்ந்துவிடும்.

இதன் காரணமாகத்தான் மார்க்சிசம் அடிப்படையை மாற்றும் போராட்டத்தை நிகழ்த்த வேண்டும் என்று கூறுகிறது. இந்தப் போராட்டம் வலுவுள்ளதாக இருந்தால்தான், மேற்கோப்பில் மதத்திற்கு எதிரான போராட்டம் அர்த்தமுள்ளதாக இருக்கும்... இந்த அடிப்படைப் போராட்டத்தைப் புறக்கணித்துவிட்டு மதத்திற்கு எதிரான போராட்டத்தை மட்டும் நடத்துவதை மார்க்சிசம்

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க..

# தில்லித் தேர்தலில் தலைகுப்புற விழுந்த பா.ஜ.க!

இந்தியாவின் தலைநகர் புதுதில்லியின் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் மொத்தமுள்ள 70 தொகுதிகளில் 67 தொகுதிகளைக் கைப்பற்றி கெஜ்ரிவால் தலைமையிலான ஆத் ஆமி கட்சி பெரும் வெற்றியீட்டியுள்ளது. கடந்த பொதுத்தேர்தலில் பெருவெற்றி பெற்று மத்தியில் ஆட்சி அமைத்த பிரதமர் நரேந்திர மோடியின் பாரதீய ஜனதாக் கட்சி, மோடியே நேரடியாக களமிறங்கி தீவிர பிரச்சாரம் செய்த போதிலும் வெறுமனே 3 ஆசனங்களை மட்டும் பெற்று படுதோல்வி அடைந்துள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு எந்தவிதமான ஆசனமும் கிடைக்கவேயில்லை.

கடந்த தேர்தலின் போதும் ஆத் ஆமி கட்சி வெற்றி பெற்று கெஜ்ரிவால் முதலமைச்சராகப் பதவியேற்றபோதும், அவர் லோக்பால் மசோதா பிரச்சினையை முன்னிட்டுப் பதவி விலகியதால்தான் தற்போதைய தேர்தல் நடைபெற்றது. முன்னைய தேர்தலில் 38 ஆசனங்களை வென்றிருந்த பாரதீய ஜனதாக் கட்சி இந்த முறை அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளது.

ஆம்ஆமி கட்சியின் வெற்றி சில உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளது. அதில் ஒன்று, பாரதீய ஜனதாவின் இந்துத்துவ வெறிப்போக்கை மக்கள் நிராகரித்துள்ளர் என்பது. இரண்டாவது, 'மோடி அலை' என்ற பிரமை தகர்த்தெறியப்பட்டுள்ளது என்ற விடயம். மூன்றாவது, பாரதீய ஜனதாவுக்கும் காங்கிரசுக்கும் மாற்றாக மக்கள் நாட்டுக்குப் புதிய தலைமை ஒன்றை விரும்புகிறார்கள் என்பது.

"கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு" என்பது போல மோடி அரசின் முகத்திரை குறுகிய காலத்தில தலைநகர் தில்லியிலேயே கிழித்தெறியப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் மோடியும் சகாக்களும் கடந்த தேர்தலின் போது மக்களுக்குச் சொன்னது ஒன்று செய்தது வேறொன்று. அதுபோலத்தான் இலங்கையிலும் பதவியேற்றுள்ள புதிய அரசு சொன்னது ஒன்றாகவும், செய்வது வேறொன்றாகவும் இருக்கின்றது. அவர்களது புளுகும் எட்டு நாளைக்குத்தான் என்று சொல்லலாமா?

– முனீஸ்

# மகிந்தவின் தோல்விக்கு அவரது தரப்பு வழங்கிய பங்களிப்பு!

**களனியூரான்**

இயற்கையின் செயற்பாடுகள் என்றாலும் சரி, மனிதனின் செயற்பாடுகள் என்றாலும் சரி, இடையறாது மாற்றத்துக்கு உள்ளாகின்றன. இது ஒரு விஞ்ஞானரீதியிலான பொது விதி. இந்த மாற்றத்துக்கு புறக் காரணிகளும், அகக் காரணிகளும் தவிர்க்கவியலாதவாறு பங்களிப்புச் செய்கின்றன. நடந்து முடிந்த இலங்கை ஜனாதிபதித் தேர்தலிலும் அவ்வாறான ஒரு நிலையைக் காண முடிகிறது.

முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தோல்விக்கு வலிமையான உள்நாட்டு – வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளின் திட்டமிட்ட செயற்பாடுகள் முக்கிய பங்கு வகித்துள்ளன என்பது உண்மை. அதேநேரத்தில் மகிந்த ராஜபக்ச தரப்பினரின் உள்ளக ரீதியான பங்களிப்பும் அவரது தோல்விக்கு கணிசமான அளவு பங்களிப்பைச் செலுத்தியுள்ளது.

சிங்கள மக்களில் பெரும்பாலோர் மகிந்தவுக்கு வாக்களித்ததை தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டின. அதற்குக் காரணம் அவரது அரசாங்கத்தின் தேசபக்த செயற்பாடுகளும், பிரிவினைவாத, பயங்கரவாத புலிகளை அவர் ஒழித்துக் கட்டியதும் என்பதில் மாற்றுக் கருத்தேதும் இருக்க முடியாது.

அதேநேரத்தில் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்கு தமிழ் பேசும் தமிழ் - முஸ்லீம் இனங்கள் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளன என்பதையும் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டியது. மகிந்தவும் இந்த சிறுபான்மை இனங்கள் தனக்கு வாக்களிக்கவில்லை என பகிரங்கமாக் குறிப்பிட்டார். ஏன் இந்த நிலை?

பொதுவாக தமிழ் மக்கள் எப்போதும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிரான ஒரு மனநிலையிலேயே இருந்து வந்திருக்கின்றனர். அதற்குக் காரணம் அவர்களுடைய தலைமைகள் நாடு சுதந்திரமடைந்த நாளிலிருந்து திட்டமிட்டு ஐ.தே.கவையே தமிழ் மக்களின் நண்பனாக தமிழ் மக்களுக்குக் காட்டி வந்ததும், தமிழ் மக்களின் பழமைவாத நிலைப்பாடுகளும் ஆகும். இருந்தாலும் சில விதிவிலக்குகளும் வரலாற்றில் இருந்துள்ளன. எவே தமிழ் மக்கள் ஒருபோதுமே மாற்றப்பட முடியாதவர்கள் அல்ல.

உண்மையில் புலிகளின் கடைசிக் காலத்தில் அவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு அதிகரித்திருந்தது. புலிகளை அரசாங்கம் அழித்து, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, தமக்கு ஒரு நிம்மதியான வாழ்வு கிடைக்க வேண்டும் என தமிழ் மக்கள் எதிர்பார்த்தனர். அவர்கள் எதிர்பார்த்தது போலவே புலிகள் அரசினால் அழிக்கப்பட்டனர். புலிகளை அழித்த பின்னர் அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியான




தீர்வைக் காணும் என தமிழ் மக்கள் நம்பினர். ஆனால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் குடியேற்றம், பொருளாதார அபிவிருத்தி என்பனவற்றை நல்ல முறையில் செய்து, வட மாகாணசபைத் தேர்தலையும் நடாத்திய அரசாங்கம், குறைந்த பட்சத் தீர்வான மாகாணசபைகளுக்கான அதிகாரங்களைக் கூட கொடுக்க மறுத்தது. இது தமிழ் மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கையை பெருமளவு தகர்த்தது.

அத்துடன் தேவைக்கு அதிகமான இராணுவத்தினரை வடக்கில் தொடர்ந்தும் வைத்திருந்தது, பொதுமக்களின் காணிகளை இராணுவம் கையளிக்க மறுத்தது, வட மாகாண ஆளுநராக இராணுவ அதிகாரியைத் தொடர்ந்தும் வைத்திருந்தது என்பன, தாம் ஒரு இராணுவ அழுத்தத்தின் கீழ் இருப்பது போன்ற உணர்வையும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியது. இத்தகைய நிலைமை வெறும் உரலையே இடிக்கக்கூடிய தமிழ் கூட்டமைப்புக்கு அவர்களது உரலில் அவலையும் அரசாங்கமே போட்டுவிட்டது போலானது.

முஸ்லீம் மக்களைப் பொறுத்தவரையில், பொதுபல சேனா போன்ற பௌத்த சிங்கள மேலாதிக்க அமைப்புகள் அவர்கள் மீது தொடர்ச்சியாக செய்து வந்த இன விரோத, மத விரோத நடவடிக்கைகளை அரசாங்கம் கண்டும் காணாமல் இருந்தது அவர்களுக்கு அரசாங்கத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்தக் காரணமாகியது. இந்த விடயத்தில் அரசாங்கத்தில் உள்ள சில சக்தி வாய்ந்த நபர்களே முஸ்லீம் விரோத நடவடிக்கைகளுக்குத் தூண்டுகோலாக இருந்தனர் என்ற சந்தேகமும் முஸ்லீம் மக்களுக்கு ஏற்பட்டிருந்தது. இந்த நிலைமை காரணமாகவே முஸ்லீம்கள் மகிந்தவுக்கு விரோதமான ஒரு நிலையை எடுக்க வைத்தது.

இவைகள் தவிர, இறுதிப் போரில் மட்டுமின்றி, போர் நடைபெற்ற காலம் முழுவதும் அரச படைத் தரப்பும், புலிகளும் செய்த மனித

தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...



# அரசாங்க அதிகாரத்தையும், சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையையும் விட்டுக் கொடுத்தது பாரிய தவறு!

## -இடதுசாரித் தலைவர்கள் கருத்து!!

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்ததும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அதிகாரத்தின் கீழ் இருந்த அரசாங்கத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்கு விட்டுக் கொடுத்ததும், அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமராக நியமிக்க அனுமதித்ததும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி செய்த பாரிய தவறாகும். சுதந்திரக் கட்சி தனது இந்த நடவடிக்கைகள் சம்பந்தமாக கூட்டமைப்பின் இதர கட்சிகளுடன் கலந்து ஆலோசிக்கவும் இல்லை என ஐக்கிய சோசலிச கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார கூறியிருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்ற பின்னர் எழுந்துள்ள அரசியல் நிலைமைகளையும், அதில் இடதுசாரிக் கட்சிகளின் நிலைப்பாடு சம்பந்தமாகவும் விளக்குவதற்காக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி என்பன பொரளையிலுள்ள டாக்டர் என்.எம்.பெரேரா நிலையத்தில் கூட்டாக ஒழுங்கு செய்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே வாசுதேவ நாணயக்கார இவ்வாறு கூறியிருக்கிறார்.

நாணயக்கார மேலும் கூறுகையில், மகிந்த ராஜபக்ச செய்த மேலும் ஒரு தவறு சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை மைத்திரிபால சிறிசேனவிடம் விட்டுக் கொடுத்தது ஆகும். ரணில் விக்கிரமசிங்க தேசிய அரசாங்கம் பற்றிப் பேசுகின்றார். அது ஒரு பொய்க் கதை. இடதுசாரிகளான நாம் எந்தக் காரணம் கொண்டும் அவரது அரசாங்கத்தை ஆதரிக்கமாட்டோம். ஆனால் புதிய ஜனாதிபதியின் 100 நாள் வேலைத் திட்டத்துக்கு ஆதரவு வழங்குவோம் என்றார்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமை ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நடந்து கொண்ட முறை, மகிந்த ராஜபக்சவுக்கு வாக்களித்த 57 இலட்சம் மக்களுக்கு இழைத்த துரோகம் எனக் குறிப்பிட்டார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான டியு குணசேகர கருத்துக் கூறுகையில், ஜனாதிபதித் தேர்தலின் போது மகிந்த ஆதரவுப் பிரச்சாரம் பெருமளவு கொழும்பை மையப்படுத்தி மேற்கொண்டமையும், தனியார்துறையைச் சேர்ந்த அச்சு – இலத்திரனியல் ஊடகங்கள் திட்டமிட்ட முறையில் எதிரணி வேட்பாளருக்காக மேற்கொண்ட பிரச்சாரங்களும் மகிந்தவின் தோல்வியில் முக்கியமான பங்கை வகித்துள்ளன. அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது முறையாகவும் போட்டியிடுவதைத் தவிர்க்குமாறு இடதுசாரிக் கட்சிகள் கேட்டுக் கொண்டதையும் மகிந்த செவிமடுக்காததுவும் ஒரு தவறு.

இருந்தாலும் பல கட்சித் தாவல்கள், எதிரணிகள் ஒன்று திரட்டப்பட்டது, வெளிநாட்டு சக்திகளின் ஆதரவு இவற்றுக்கு மத்தியிலும் மைத்திரிபால சொற்ப வாக்கு வித்தியாசத்திலேயே வெற்றியீட்டியுள்ளார். வறுமைப்பட்ட மக்களில் பெரும்பாலோர் கடந்த அரசாங்க காலத்தில் பெற்ற நன்மைகளுக்காக மகிந்தவுக்கு வாக்களித்துள்ளனர். ஐ.தே.க அரசாங்கம் வெகுவிரைவில் நாட்டின் பொருளாதாரத்தை அந்நியருக்குச் சாதகமாக மாற்றி அமைக்கும் எனத் தெரிவித்தார்.

மேலும் இடதுசாரித் தலைவர்கள் கருத்துக் கூறுகையில், நோர்வேயின் உதவியுடன் செயற்படும் பொதுபல சேனா திட்டமிட்ட முறையில் மேற்கொண்ட நடவடிக்கைகளும் மகிந்த ராஜபக்சவின் வெற்றியைப் பாதித்துள்ளன எனச் சுட்டிக்காட்டினர்.

தமிழ் – முஸ்லீம் வாக்குகள் எதிரணிக்கு அளிக்கட்டதால்தான் மகிந்த தோல்வியுற்றார் எனக் கூறப்படும் கருத்தையும் இடதுசாரித் தலைவர்கள் கூட்டாக நிராகரித்தனர். *

5ம் பக்கத்தொடர்ச்சி…

உரிமை மீறல்களை அரசாங்கம் நேர்மையான முறையில் விசாரிக்கத் தவறியது, அரசாங்கம் தானே நியமித்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக் கூட நடைமுறைப்படுத்தத் தவறியது, மகிந்த குடும்பம் அரசாங்கத்தின் முக்கிய பொறுப்புகளை வகித்தது, அரசாங்க முக்கிய புள்ளிகள் சிலரின் ஊழல் – மோசடி நடவடிக்கைகள், அதிகாரிகளின் அதிகாரத் துஸ்பிரயோகம், வீண விரயம், அரச நிர்வாகத்தின் திறமையற்ற போக்கு போன்ற வேறு பல காரணங்களும் மகிந்தவின் தோல்விக்கான உள்ளார்ந்த காரணிகளாகும்.

இந்தக் காரணிகளுடன் மகிந்த மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடிவு செய்தது, சோதிடர்களின் மூடத்தனமான எதிர்வுகூறல்களை நம்பி இரண்டு வருடங்களுக்கு முன்பதாகவே தேர்தலை நடாத்தியமை என்பனவற்றையும் குறிப்பிடலாம்.

ஏகாதிபத்திய சார்பு, பிற்போக்கு வலதுசாரிக் கட்சியான ஐ.தே.கவுக்கு எதிரான இப்போதைக்கான மாற்று என்ற வகையில் குறிப்பாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், பொதுவாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் தமது தவறுகளை ஆராய்ந்து தகுந்த பரிகாரம் செய்துகொண்டு, நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கான போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் கடமை அவர்களுக்கு இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

# மியன்மார் (பர்மா) ஜனநாயப் போராளியின் மறுபக்கம்!



பர்மாவை நீண்டகாலம் ஆட்சி செய்த ஜெனரல் நீவின் அவர்களின் மகளும், சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சான் சூயி (Aung San Suukyi) , அந்நாட்டில் ஜனநாயகத்தைக் கொண்டு வருவதற்காகப் போராடியதற்காக சுமார் 20 வருடங்கள் வரை அந்நாட்டு இராணுவ ஆட்சியாளர்களினால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்.

அமெரிக்கா உட்பட பல நாடுகள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட வற்புறுத்தலால் இறுதியில் இராணுவ ஆட்சியாளர்கள் அவரை வீட்டுக் காவலிலிருந்து விடுதலை செய்யவேண்டி ஏற்பட்டது. அதன் பின்னர் அவர் தனது ஜனநாயத்துக்கான தேசிய கழகம் (National League for Democracy) சார்பாக பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பர்மியப் பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பிராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் இருக்கின்றார்.

அவரது விடுதலையின் பின்னர் பர்மிய மக்கள் அவரிடம் இருந்து நாட்டுக்கான பெரியளவிலான செயற்பாடுகளை எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர் வீட்டுக்காவலில் இருந்தபோது பர்மிய மக்கள் அவரைக் கொண்டாடிய அளவுக்கு அவரது செயற்பாடுகள் இல்லையென்ற அதிருப்தி இப்பொழுது பர்மிய மக்கள் மத்தியில் நிலவுகின்றது. அவரது சொந்த கட்சி உறுப்பினர்களே இப்பொழுது அவரைக் குறைகூற ஆரம்பித்துள்ளனர்.

## பிரபஞ்சன்

முக்கியமாக அந்நாட்டில் இராணுவ ஆட்சியின் உதவியுடன் ரொகின்யா (Rohingya) என்ற முஸ்லீம் சிறுபான்மை இனத்துக்கெதிராக பௌத்த மேலாதிக்கவாதிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர்ச்சியான அராஜக நடவடிக்கைகளைப் பற்றி அவர் இன்றுவரை வாய்திறக்காமல் இருப்பது பலரையும் ஆச்சரியத்திலும், அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது. (பர்மாவில் முஸ்லீம்களுக்கெதிரான இனச்சுத்திகரிப்பில் ஈடுபட்டு வரும் சக்திகளுக்கு தலைமைதாங்கும் விராது (Wirathu) என்ற பௌத்த மதகுருவைத்தான் இலங்கையில் முஸ்லீம்களுக்கு எதிராகச் செயற்பட்டு வரும் பொதுபலசேனா என்ற பௌத்த மதவாத அமைப்பு தனது மாநாட்டுக்காக சிறிது நாட்களுக்கு முன்னர் கொழும்புக்கு அழைத்திருந்தது)

பர்மிய முஸ்லீம்கள் சம்பந்தமான சூயியின் இந்த நிலைப்பாட்டை அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு செயற்படும் மனித உரிமைக் கண்காணிப்பகம் (Human Rights Watch) உட்பட பல மனித உரிமை அமைப்புகள் கண்டனம் செய்துள்ளன.

சிறுபான்மை இனங்களின் பிரச்சினையில் மட்டுமின்றி, சாதாரண ஏழை எளிய மக்களின் பிரச்சினைகளிலும் ஆங் சான் சூயியின் நிலைப்பாடு பிரச்சினைக்குரியதாகவே இருக்கின்றது. உதாரணத்துக்கு பர்மாவில் செயற்படும் ஒரு சுரங்க நிறுவனத்துக்கும், அது செயற்படும் பகுதியிலுள்ள ஏழை விவசாயிகளுக்கும் நிலம் சம்பந்தமான ஒரு பிரச்சனை ஏற்பட்டபோது, அது சம்பந்தமான விசாரணைக் குழுவுக்கு தலைமைதாங்கிய சூயி, அந்த ஏழை மக்களுக்கு எதிராக சுரங்க முதலாளிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டையே எடுத்தார். இது பலருக்கு அவர் மீது இருந்த நம்பிக்கையைத் தகர்த்துள்ளது.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் பெரும்பாலும் சூயியின் ஜனநாயகத்துக்கான தேசியக் கழகம் வெற்றியீட்டலாம் எனக் கருதப்படும் சூழ்நிலையில், சூயியின் இந்தச் செயற்பாடுகள் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என அவரது கட்சி உறுப்பினர்கள் அஞ்சுகின்றனர். *

4ம் பக்கத்தொடர்ச்சி…

ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த இடத்தில்தான் மதத்திற்கு எதிராக பூர்சுவாக்கள் நிகழ்த்தும் போராட்டத்திற்கும் மார்க்சியவாதிகள் நிகழ்த்தும் போராட்டத்திற்கும் வேறுபாடு உள்ளது.

அடிப்படைக்கு எதிரான போராட்டம் (வர்க்கப் போராட்டம்) பிரமாண்டமான ஒன்று. அதற்குட்பட்டுத்தான் மதத்திற்கு எதிரான போராட்டம் நிகழ வேண்டும் என்பது மார்க்சிசம். மதத்திற்கு எதிரான போராட்டத்தை மட்டுமே பிரதானப்படுத்துவது பூர்சுவா நாத்திகவாதம்.

**(இந்தக் கட்டுரை எஸ்.தோதாத்ரி எழுதி என்.சி.பி.எச் புத்தக நிறுவன வெளியீடாக வந்துள்ள "மார்க்சிசமும் மதமும்" என்ற நூலுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரையின் முக்கியமான பகுதிகளாகும். தலைப்பு எம்மால் இடப்பட்டதாகும். கட்டுரையாளருக்கும், வெளியீட்டாளர்களுக்கும் எமது நன்றி – வானவில்)**

# இந்தியாவில் "புல்லட்' ரயில் சேவை தொடங்க சீனா உதவி!

இந்தியாவில் 'புல்லட் ரயில்' எனப்படும் அதிவேக புகைவண்டிச் சேவையை டெல்கி — சென்னை நகரங்களுக்கு இடையில் அமைப்பதற்கு சீனா உதவி வழங்க இருக்கிறது. இதன் நீளம் 1,754 கிலோ மீட்டர்களாகும். இதை அமைப்பதற்கு 2 இலட்சம் கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சீனா இந்த ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கு இந்தியாவுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கவுள்ளதுடன், 100 இந்திய ரயில்வே அதிகாரிகளுக்கு புல்லட் ரயில் சேவை சம்பந்தமான பயிற்சியும் வழங்கவுள்ளது. இந்த ரயில் சேவை ஆரம்பமானால் தற்பொழுது 28 மணி நேரம் பிடிக்கும் சென்னை — டெல்கி பயணம், மணிக்கு 300 கிலோ மீட்டர்கள் வேகத்தில் செல்லும் புல்லட் ரயில் மூலம் 6 மணி நேரமாக குறைய வாய்ப்புண்டு.

தற்பொழுது உலகில் ஆகக் கூடுதல் நீளமான ரயில் சேவையாக சீனாவின் பெய்ஜிங் - குவாங்சு நகரங்களுக்கு இடையிலான 2,298 கிலோ மீட்டர்கள் புல்லட் ரயில் சேவையே இருக்கின்றது.

# பல மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்த மார்க்சிச மூலவர்கள்!

மார்க்சிச தத்துவத்தை உலகிற்கு வழங்கிய மூலவர்களான கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் ஏங்கெல்ஸ் ஆகியோர் தமது கருத்தை நிறுவுவதில் கடுமையாக உழைத்தவர்கள். அவர்கள் தமது கருத்தை நிறுவுவதற்காக தமது காலத்தில் வெளியான சமூகவியல் மற்றும் இயற்பியல் நூல்களையும், அறிக்கைகளையும் ஆயிரக்கணக்கில் ஆராய்ந்திருக்கிறார்கள்.
அதற்கு வசதியாக இருவரும் பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள். குறிப்பாக ஏங்கெல்ஸ் 12 மொழிகளில் சரளமாக எழுதவும் பேசவும் கூடியவராக இருந்தார். 20 மொழிகளில் அவரால் வாசித்து விளங்கக்கூடியதாக இருந்தது.

மார்க்ஸ் தனது பிரசித்தமான 'மூலதனம்' நூலை எழுதி முடிக்க 40 ஆண்டுகள் பிடித்தது. அதன் மூலப்பிரதி 35 தொகுதிகள் வரை எழுதப்பட்டது.

# நறுக்கு நொறுக்கு NUTS

# கடவுச்சீட்டில் பிரித்தானியர் சாதனை!

உலகின் முக்கியமான நாடுகளைப் பொறுத்தவரையில் அதிகமான கடவுச்சீட்டை வைத்திருக்கும் மக்களில் முதன்மை வகிப்பவர்கள் பிரித்தானியர் ஆவர். அந்த நாட்டின் சனத்தொகையில் 70 வீதமானோர் கடவுச்சீட்டு வைத்திருக்கின்றனர். அவர்களுக்கு அடுத்ததாக அமெரிக்கர்களில் 30 வீதமானோர் கடவுச்சீட்டு வைத்திருக்கின்றனர். உலகின் ஆகக்கூடுதலான சனத்தொகை உள்ள சீனாவில் 4 வீதமானோரே கடவுச்சீட்டு வைத்திருக்கின்றனர். உலக அளவில் வருடம் தோறும் கடவுச்சீட்டுப் பெறுவோரின் தொகை 10 முதல் 15 மில்லியன் வரை அதிகரித்துச் செல்கிறது.

# இதிலும் இலங்கைத் தமிழன் விண்ணனா?

திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் என்பது பிரசித்தி பெற்றது. இலங்கையில் வீட்டிற்குப் பூமிபூஜை போடும்போது திருச்செந்தூர் ஸ்தல புராணத்துடன் வைத்து வழிபாடு செய்து பின்னர் தான் கட்டிட வேலையை ஆரம்பிப்பார்களாம்.

-'கலைமகள்' பொறுப்பாசிரியர் கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன் எழுதிய கட்டுரையொன்றில்

# நீர் பற்றிய முதுமொழி

ஆற்று நீர் வாதம் போக்கும் (மூலிகைகள் கலந்திருப்பதால்). அருவி நீர் பித்தம் போக்கும் (கனிமங்கள் கலந்திருப்பதால்). சோற்று நீர் இரண்டும் போக்கும்!

சிந்திக்காமல் படிப்பது வீண், படிக்காமல் சிந்திப்பது ஆபத்தானது. **- கன்பூசியஸ்**

# தபால்தலை கௌரவம்

இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் எனக் கொண்டாடப்படும் அநகாரிக தர்மபால அவர்களைக் கௌரவிக்கும் முகமாக இந்திய அரசாங்கம் அவருக்கு ஞாபகார்த்த முத்திரை ஒன்றை வெளியிட்டுள்ளது. குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி இது சம்பந்தமான வைபவத்தில் கலந்து கொண்டு தபால்தலையை வெளியிட்டு வைத்தார்.

இதற்கு முன்னர் இலங்கை அரசாங்கம் இந்தியாவின் ஆன்மிகத் தூதர் சுவாமி விவேகானந்தர் அவர்களைக் கௌரவிக்கு முகமாக அவரது ஞாபகார்த்த தபால் தபால் தலை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதற்குப் பிரதிகூலமாகவே இந்திய அரசு அநகாரிக தர்மபாலவிற்கு தபால்தலை வெளியிட்டுள்ளது.

# வறுமையும் வசதியும் சரிக்குச்சரி!

"உலகம் முழுவதும் 270 கோடி பேருக்கு இணையத்தள வசதி உள்ளது.
நாள் ஒன்றுக்கு 2,000 கோடி எஸ்.எம்.எஸ். (SMS) தகவல்கள் அனுப்பப்படுகின்றன. இதற்கான செலவைக் குறைத்தால் தினமும் 10 ஆயிரம் கோடி எஸ்.எம்.எஸ். அனுப்ப முடியும்.

உலகம் முழுவதும் 250 கோடி பேர் நாள் ஒன்றுக்கு 120 (இந்திய) ரூபா சம்பளம் பெறுபவர்களாகத்தான் உள்ளனர். அவர்களுக்கு இணையத்தளம் எட்டாக்கனியாக உள்ளது."

இவ்வாறு கூறியிருக்கிறார் அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த பேஸ்புக் (Face Book) சமூகத் தொடர்பு இணையத்தளத்தின் முக்கியமான நிறுவனரான மார்க் சுக்கர்பெர்க். இவர் அமெரிக்காவின் முதல்தர செல்வந்தரான மைக்ரோசொப்ற் கம்யூட்டர் நிறுவனத்தின் தலைவர் பில் கேற்ஸ் இற்கு அடுத்த நிலையிலுள்ள பணக்காரராவர்.

"ஆயிரம் மைல் பயணமானாலும் முதல் அடி எடுத்து வைத்தே ஆரம்பிக்கப்படுகிறது"

- ஒரு சீனப் பழமொழி

காற்று அடிக்கும் திசையில்தான் புல் வளையும். **- சீன அறிஞர் கன்பூசியஸ்**

# ‘திரவத் தங்கம்’ எனும் ஒலிவ் எண்ணெய்!



இன்று உலகம் முழுவதும் உடலுக்குத் தீங்கு விளைவிக்காத நல்ல கொழுப்புக்கு (Healthy Fat) பெயர்போன ஒன்றாக ஒலிவ் எண்ணெய் (Olive Oil) இருக்கின்றது.

இந்த எண்ணெய் மற்றைய எண்ணெய்கள் போல ஒருசில நூற்றாண்டுகளுக்கு முன்னர் பாவனைக்கு வந்த ஒன்றல்ல. இது கிறிஸ்துவுக்கு முன் ஆறாவது புத்தாயிரம் ஆண்டிலிருந்து (6th Millenium) பாவனையில் உள்ளது.

ஒலிவ் எண்ணெய் பாவனைக்கு வந்த காலத்திலிருந்து அது உணவுத் தேவைக்கு மட்டும் பயன்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்கவில்லை. வைத்தியத்துக்கு, அழகு சாதனத் தயாரிப்புக்கு, விளக்கு எரிப்பதற்கு, சமயக் கிரியைகளுக்கு என பல தேவைகளுக்கும் அது பயன்பட்டு வந்துள்ளது.

ஒலிவ் எண்ணெயை தலைமுடிக்கு கிரமமாகப் பூசி வந்தால், முடி கருமையாகவும் செழிப்பாகவும் வளரும் என்பதும் நடைமுறையில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கிரேக்கத்திலும், ரோமிலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட புராதன மினோன் (Minoan) நாகரீக காலத்து மட்பாண்டங்களில் ஒலிவ் எண்ணெய் சேமித்து வைத்திருப்பதற்காக அவை பயன்படுத்தப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது. ஒலிவ் எண்ணெயின் மகத்துவம் பற்றி கிறிஸ்துவுக்கு முன் 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க கவிஞரும் அறிஞருமான ஹோமர் (Homer) வர்ணிக்கையில், அது ஒரு ‘திரவத் தங்கம்’ (Liquid Gold) எனக் கூறியுள்ளார்.

இன்று ஏறக்குறைய உலகிலுள்ள எல்லா நாடுகளுமே ஒலிவ் எண்ணெயை உணவுகளுக்குப் பயன்படுத்தினாலும், மத்தியதரைக் கடல் பிரதேச நாடுகளில் அதைப் பயன்படுத்தி செய்யப்படும் உணவு வகைகளே பிரசித்தமானவை. உலகில் ஸ்பெயின் நாட்டிலேயே அதிகமான ஒலிவ் செய்கை பண்ணப்பட்டாலும், மத்தியதரைக் கடல் பிரதேச நாடுகளில் தயாராகும் ஒலிவ் எண்ணெய்க்கே மவுசும் அதிகம்.

ஒலிவ் எண்ணெயில் Monounsaturated Oleic Acid 70%, Saturated Palmitic Acid 13%, Polyunsaturated Linoleic Acid 15% என்ற வகையில் கொழுப்புகள் அடங்கியுள்ளன. இதில் அடங்கியுள்ள அமிலங்கள் கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்தி, பல விதமான இருதயம் சம்பந்தப்பட்ட நோய்களைத் தடுக்க வல்லவை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் ரகம் 2 நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கும் ஒலிவ் எண்ணெய் பயன் தரக்கூடியது என்பது ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

இன்று உலகம் முழுவதும் விற்பனை நிலையங்களில் பலவிதமான ஒலிவ் எண்ணெய்கள் விற்பனைக்கு உள்ளன. அதனால் எந்த ரகத்தை வாங்குவது என்ற குழப்பம் பாவனையாளர்களுக்கு ஏற்படுவது சகஜம். ஆகையால் அதன் தரம் பற்றி அறிந்திருப்பது முக்கியம்.

முதலாவதாக, உயிர்ப்புள்ள (Organic) தரத்தைத் தெரிவு செய்ய வேண்டும். இரண்டாவதாக, கூடுதல் தூய்மையானதாக (Extra Virgin) பார்த்து வாங்க வேண்டும். மூன்றாவதாக, குளிரில் பதப்படுத்தியதாக (Cold Processing) இருக்க வேண்டும். இவையே சிறந்த ரக ஒலிவ் எண்ணெய்கள்.

ஒலிவ் எண்ணெயைப் பொறுத்த இன்னொரு முக்கிய விடயம், அதை அதிகம் சூடாக்கக்கூடாது. அப்படிச் சூடாக்கினால் அதிலுள்ள நல்ல கொழுப்பின் தன்மை மாற்றமடைந்துவிடும். பொதுவாக சமைத்த உணவுகள், சலாட் வகைகளுக்கு அதை பச்சையாகப் பயன்படுத்துவதே சிறந்தது.

மஞ்சள், ஒறேஞ், சிவப்பு நிறங்களுடைய பழங்கள், மரக்கறி வகைகளுக்கு ஒலிவ் எண்ணெயைப் பயன்படுத்தினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

தகவல் ஆதாரம்: ‘Tonic’ Masgazine – Canada

**குறிப்பு:** இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இருக்கும் இலுப்பை என்ற மரமும் ஏறத்தாழ ஒலிவ் போன்றதே. இரண்டினதும் இலைகளும், விதைகளும் அண்ணளவாக ஒரே தோற்றமுடையவை. நமது முன்னோர் இலுப்பெண்ணெயை உணவுத் தேவைகளுக்கும், விளக்கு எரிப்பதற்கும், நோய் தீர்ப்பதற்கும் (பித்த வெடிப்புக்கு அருமருந்து) எனப் பல வகைகளில் பயன்படுத்தி வந்துள்ளனர். இலுப்பைப் பூவையும் சர்க்கரைக்குப் பதிலாகப் பயன்படுத்தி இருக்கின்றனர். இன்றும் அசல் இல்லாமல் நகலாக இருக்கும் மனிதர்களுக்கு அல்லது பொருட்களுக்கு ‘இலுப்பைப்பூ சர்க்கரை போல’ என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவதுண்டு.

ஆனால் காலப்போக்கில் அதன் மகத்துவம் தெரியாமல் நாம் இலுப்பை மரங்களை அழிய விட்டதுடன், அதன் பாவனையையும் கைவிட்டுவிட்டோம். அத்துடன் இலுப்பையின் பயன்பாடு பற்றிய முறையான விஞ்ஞானபூர்வமான ஆய்வுகளும் இதுவரை முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

## வெள்ளைப்பூண்டின் மகத்துவமிக்க குணங்கள்

வெள்ளைப்பூண்டை உணவில் அதிகம் சேர்ப்பவர்களுக்கு மலேரியா நோய் வராது. பூண்டை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் உடலில் தேவையற்று சேரும் கொழுப்பு குறையும். உடல் கொழுப்பின் அளவை கட்டுப்பாட்டுக்குள் இருக்க, தினமும் காலையில் 4 வெள்ளைப்பூண்டுத் துண்டுகளை சாப்பிடுவது நல்லது. வலிப்பு வருகிற குழந்தைகளுக்கும், இருமல், சளி தொந்தரவு இருப்பவர்களுக்கும் பூண்டு சாறு கொடுத்துவர மெல்ல மெல்ல குணம் பெறலாம். இரைப்பு, இருமல், வயிற்றில் பூச்சி இருப்பவர்களுக்கு பூண்டு சாறுகளை சில துளிகள் உள்ளுக்குள் சாப்பிட கொடுக்க எளிதில் குணம் கிடைக்கும். டான்ஸில் (Tonsillolith) என்கிற உள் நாக்கு வளர்ந்திருப்பவர்கள், அந்த வளர்ந்த உள்நாக்கு சதை வளர்ச்சியின் மீது பூண்டுசாறினை தடவி வர நல்ல குணம் கிடைக்கும். பூண்டை பாலில் வேகவைத்து சாப்பிட உடல் கொழுப்பு குறையும். இரத்தக்கொதிப்பு, மனஅழுத்தம் போன்ற பாதிப்பு உள்ளவர்களுக்கு பூண்டு நல்ல மருந்து. பூண்டில் பலவித சத்துக்கள் இருந்தாலும் அதிகமாக இருப்பது கால்சியம்தான். எனவே பூண்டை அதிகமாக சமையலில் பயன்படுத்துவதன் மூலமாக நாம் நமது எலும்பிற்கு வருகின்ற பாதிப்புகளில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

# சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வரலாற்று வகிபாகம் முடிவடைந்து விட்டதா?



**இ**லங்கையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கட்டு இற்றை வரையிலான 64 வருடங்களில் சந்திக்காத பெரும் நெருக்கடி ஒன்றை இன்று எதிர்நோக்கியுள்ளது. இந்த நெருக்கடியை உருவாக்கியதில் முக்கியமான பங்கை வகித்தவர்கள் இருவர். ஒருவர் அக்கட்சியை 1951இல் ஸ்தாபித்ததில் பிரதான பங்கு வகித்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் புதல்வியும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க. மற்றவர் அவரது எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்த அக்கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரும், இன்றைய ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன.

இவர்கள் இருவரும் செய்த மிகப்பெரும் தவறு முன்னொருபோதும் இல்லாதவகையில், அக்கட்சியை முன்னர் தலைமை தாங்கியவர்கள் ஒருபோதும் எண்ணிப்பார்த்திருக்காத வகையில், அக்கட்சியின் பரம அரசியல் வைரியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அரசாங்கமொன்றை அமைத்தது. அதற்கு அவர்கள் சொல்லும் ஒரேயொரு காரணம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் எதேச்சாதிகாரம் மிக்க, ஊழல்மிக்க, குடும்ப ஆதிக்கம் உள்ள அரசாங்கத்தை அகற்றுவதற்காகவே ஐ.தே.கவுடன் புனிதக் கூட்டணி அமைக்கப்பட்டது என்பதுதான்.

மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தின் மீது அவர்கள் வைக்கும் குற்றச்சாட்டில் சில உண்மைகள் இருப்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அதை எதிர்த்துப் போராடுவதற்கு மக்கள் சக்தியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் என்ற மாபெரும் அணியும் இருக்கத்தக்கதாக காலம் காலமாக நாட்டு மக்களின் பிரதான விரோதியாக இருக்கும் ஐ.தே.கவின் கூட்டுத்தான் கிடைத்ததா? இது ஒரு உள்ளூர் திருடனைப் பிடிப்பதற்காக சர்வதேச கொள்ளைக்காரனுடன் கூட்டுச் சேர்வதற்கு ஒப்பானதே அன்றி வேறல்ல.

சுப்பராஜன்

சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்த பண்டாரநாயக்கவும், அவரது சகாக்களான டி.ஏ.ராஜபக்ச (மகிந்த ராஜபக்சவின் தகப்பனார்), எஸ்.டி.பண்டாரநாயக்க (முன்னாள் கம்பஹா பாராளுமன்ற உறுப்பினர்) போன்றோரும் ஒரு அரசியல் கட்சியை உருவாக்க வேண்டும் என்ற வெறும் ஆசையில் அதை உருவாக்கவில்லை.

சுதந்திர இலங்கையின் முதலாவது அரசைப் பொறுப்பேற்ற டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க அரசு நாட்டுக்கு விரோதமான ஏகாதிபத்திய சார்புக் கொள்கையையும், பிற்போக்கான நிலப்பிரபுத்துவ சார்பு, முதலாளித்துவ சார்புக் கொள்கைகளையும் பின்பற்றிய காரணத்தினாலேயே அவ்வரசில் அங்கம் வகித்த பண்டாரநாயக்கவும் அவரது சகாக்களும் அதிலிருந்து வெளியேறி சிறீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினர். அவர்களது கொள்கைகளை மக்கள் பெருமளவில் விரும்பி ஆதரித்த காரணத்தால்தான் கட்சி ஆரம்பித்து 5 வருடங்களில் – 1956இல் – சுதந்திரக் கட்சி அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றியது.

அன்றிலிருந்து பண்டாரநாயக்கவும், பின்னர் அவர் 1959இல் பிற்போக்கு சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட பின்னர் அவரது மனைவி சிறீமாவோவும், தீவிரமான ஏகாதிபத்திய விரோத, நிலப்பிரபுத்துவ விரோத, பெரும் முதலாளித்துவ விரோத மக்கள் சார்புக் கொள்கைகளை முன்னெடுத்து வந்திருக்கின்றனர். ஏகாதிபத்திய சக்திகளும், ஐ.தே.க தலைமையிலான உள்ளூர் பிற்போக்கு சக்திகளும் அவர்களுக்குப் பலவிதமான நெருக்கடிகளைக் (கொலை, இராணுவச்சதி முயற்சி) கொடுத்த போதும்,

அவர்கள் தமது நடவடிக்கைகளிலிருந்து ஒருபோதும் பின்வாங்கவில்லை. அதற்கு ஒரு காரணம் அவ்வரசுகளுக்கு இடதுசாரிக் கட்சிகள் கொடுத்த ஆதரவுமாகும்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமைதாங்கிய அரசுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஓரளவு தளர்ந்திருந்த காலம் சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலம் என்று சொல்லலாம். அதற்கு ஒரு காரணம் அவர் மேற்கத்தைய சக்திகளைப் புலிகளுக்கு எதிரான போரில் 'வென்றெடுப்பதற்காக' என்று இன்று சில அவரது ஆதரவாளர்கள் காரணம் கூறினாலும், அதனாலும் கூட அவர் எதனையும் பெரிதாகச் சாதித்துவிடவில்லை.

அவரது மேற்கத்தைய சார்பான வெளிநாட்டு அமைச்சரான லக்ஸ்மன் கதிர்காமரின் முயற்சிகள் காரணமாக மேற்கத்தைய நாடுகள் புலிகளைத் தமது நாடுகளில் தடை செய்தாலும், அதற்குப் பிரதியுபகாரமாக நோர்வேயின் எரிக் சோல்கெய்ம்மை சமாதான முயற்சிகள் என்ற போர்வையில் இலங்கை விவகாரங்களில் உள் நுழைந்து அப்பம் பங்கிடும் குரங்குகளாக இருந்து கொண்டன. அதன் காரணமாக இலங்கையில் யுத்தம் முடிவுறாமல் இருக்கும் சூழ்நிலையை அவை உருவாக்கிக் கொண்டன. மறுபக்கத்தில் பொருளாதார ரீதியாகவும் இலங்கையை அந்நிய ஆதிக்கத்திலிருந்து மேலும் கூடுதலாக விடுவிக்கும் நடவடிக்கைகளையோ, பாரிய பொருளாதார நடவடிக்கைகளையோ சந்திகாவின் அரசு மேற்கொள்ளவில்லை. அவ்வாறாக சந்திரிகாவின் அரசு முன்னைய சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் செய்தது போன்று எந்தவொரு குறிப்பிடத்தக்க சாதனையையும் செய்யவில்லை.

இக்காலகட்டத்தில் மேற்கத்தைய நாடுகளைத் திருப்திப்படுத்தும் விதமாக சந்திரிகா சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசின் கொள்கைகளை சமனப்படுத்தி அல்லது சமரசப்படுத்திக் கொண்டார். புலிகளுக்குள் பிளவு தோன்றி அவ்வியக்கத்தின் கிழக்கு மாகாணத் தளபதிகளான கருணா, பிள்ளையான் போன்றோர் பிரிந்து சென்று அவ்வியக்கம் பலவீனப்பட்ட பொழுது, புலிகளின் தலைவர் பிரபாகரன் கிழக்குப் புலிகளை அழிப்பதற்கு வடக்கிலிருந்து தனது படையணிகளை அனுப்பி வைத்தார். அந்த நேரத்தில் சந்திரிகாவின் இராணுவம் பிரபாகரனின் படைகள் வெருகல் ஆற்றைக் கடந்து வாகரைக்குச் சென்று பிரபாகரனுக்கு எதிரான கிளர்ச்சிப் புலிகளை அழிப்பதற்கு வழிவிட்டதால் அநியாயமாக 300 வரையிலான கிளர்ச்சிப் புலிகள் கொல்லப்பட்டனர். இதுவும் அவரது ஆட்சியின் கறைபடிந்த ஒரு அத்தியாயம்.



இத்தகைய சூழ்நிலையில்தான் 2005இல் ஜனாதிபதியாகத் தெரிவான மகந்த ராஜபக்ச, புலிகளின் வழமையான சூழ்ச்சிகளுக்கு விட்டுக் கொடுக்காது போரை உறுதியாக நடாத்தி புலிகளை இலங்கை மண்ணிலிருந்து முற்றுமுழுதாக அழித்து உள்நாட்டு யுத்தத்திற்கு முடிவு கட்டினார். மகிந்தவின் இந்த நடவடிக்கைகளும், இலங்கையை தமது ஒரு ஆதரவுத் தளமாக மாற்றுவதற்கு எத்தனித்துக் கொண்டு இருந்த வெளிநாட்டு சக்திகளின் திட்டங்களுக்கு இடம் கொடாமையும்தான், மகிந்தவின் அரசை உள்நாட்டு — வெளிநாட்டுச் சக்திகள் கூட்டுச் சேர்ந்து வீழ்த்தியதற்கான முக்கியமான காரணம். அவரது அரசின் எதேச்சாதிகாரம், ஊழல், குடும்ப ஆட்சி எனக் கூறப்படும் காரணங்கள் எல்லாம் (சில உண்மைகள் இருந்தபோதும்) உண்மையை மறைப்பதற்கு தொங்கவிடப்பட்ட திரைகளாகும்.

தமது பழைய நம்பிக்கை நட்சத்திரமான ஐ.தே.க இலங்கையில் ஒளி குன்றிப் போனதானதால்தான் வெளிநாட்டு வல்லாதிக்க சக்திகள் இந்தமுறை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்தவரையே தமது பக்கம் இழுத்தெடுத்து ஆட்சி அதிகாரத்தைத் தமக்கு சாதகமாக மாற்றியமைத்துள்ளனர். அதற்கு சந்திகா துணை போனதின் மூலம் அக்கட்சியில் தனது தந்தை — தாய் உருவாக்கிய ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாரம்பரியத்துக்கு விரோதமாகச் சென்றுள்ளார்.

இனிவரும் காலங்களிலும் கூட, ஐ.தே.கவினால் தனித்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்பது வெளிநாட்டு வல்லாதிக்க சக்திகளுக்குத் தெரியும். அதனால் ஐ.தே.கவுக்கும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஒட்டுப்போட்டு, இரண்டு முதலாளித்துவக் கட்சிகளையும் ஒரு அணியாக்கி அந்தக் குதிரையின் மீது சவாரி செய்ய இந்த வெளிநாட்டு சக்திகள் திட்டமிடுகின்றன. ஆனால் அது நடக்கப் போவதில்லை.

ஏனெனில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்ன நோக்கத்துக்காகத் தோற்றுவிக்கப்பட்டதோ அதன் வரலாற்றுக் கடமை இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை. நாட்டின் பூரண சுதந்திரம், இறைமை, ஜனநாயக அரசமைப்பு என்பன சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகள். இந்த இலக்குகளை ஒரு இடதுசாரித் தலைமையால்தான் பூரணமாக நிறைவேற்ற முடியும் என்ற போதிலும், நாட்டின் அனைத்து தேசபக்த சக்திகளையும் கூடுதலான அளவில் அளாவி நிற்கும் சுதந்திரக் கட்சிக்கு அதில் இன்னமும் முக்கியமான ஒரு பங்களிப்பு இருக்கிறது. அக்கட்சி பிரதிநிதித்துவம் செய்யும் சக்திகளின் பங்களிப்பு இல்லாமல் இந்தக் கடமையை இடதுசாரி சக்திகளால் ஒருபோதும் தனித்து நிறைவேற்ற முடியாது.

எனவே தனி மனிதர்கள் சிறீலங்கா சுதந்திரக் கட்சியையோ அல்லது நாட்டின் தலைவிதியையோ மாற்றுவதற்கு எத்தனித்தாலும், மக்களும் வரலாற்றுப் போக்கும் அதற்கு ஒருபோதும் இடம் கொடுக்கப் போவதில்லை. அதனை சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள பெரும்பான்மையினர் தமது கருத்துக்கள் மூலம் உறுதிப்படுத்தியும் வருகின்றனர்.

இன்றைய மாற்றம் என்பது தற்காலிகமானது மட்டுமே. சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் இதற்கு முன்னரும் பல வலதுசாரி அணிகள் – சி.பி.டி.சில்வா தலைமையில், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க தலைமையில் – எனத் தோன்றியிருக்கின்றன. ஆனால் அவற்றால் அக்கட்சியை அதன் அடிப்படைக் கொள்கைகளிலிருந்து மாற்ற முடியவில்லை. அதேபோல இப்பொழுது அக்கட்சியில் உருவாகியுள்ள சந்திரிகா — மைத்திரிபால சிறிசேன வலதுசாரி அணியின் பிடியிலிருந்தும் சுதந்திரக் கட்சி நிச்சயமாக மீண்டு எழுந்து வரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. *

# திருவள்ளுவர் பிறந்த தினம் எது?
## கருணாநிதியால் எழுந்த சர்ச்சை

2000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் வாழ்ந்த வள்ளுவர் என்ற மாபெரும் புலவன் ஈரடிகளில் 1330 பாக்களை இயற்றி தமிழ் மொழிக்கும், இலக்கியத்துக்கும் பெரும் சேவையை வழங்கினார்.

அந்த மாபெரும் புலவனின் பிறந்த நாளை 2015-ம் ஆண்டு முதல் இந்தியாவில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் கொண்டாடுவதற்கு இந்திய மத்திய அரசு தீர்மானித்துள்ளது. இதன் நோக்கம் எதுவாக இருந்தாலும் இந்த நல்ல விடயம் அனைவராலும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆனால் இந்த நல்ல விடயத்துக்கு தடையாக வள்ளுவரின் பிறந்த திகதி எது என்ற விடயம் இப்பொழுது குறுக்கே வந்து நிற்கின்றது.

மயிலையிலுள்ள வள்ளுவர் கோயில் கடந்த 600 வருடங்களாக வைகாசி மாதம் அனுச நட்சத்திரம் வரும் தினத்தன்றையே வள்ளுவரின் பிறந்த தினமாகக் கொண்டாடி வருகின்றது.

இதை உறுதிப்படுத்தும் விதமாக 1935-ம் ஆண்டு இலங்கையைச் சேர்ந்த பண்டிதர் கா.பொ.இரத்தினம் (தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்) தலைமையில் தமிழகத்தின் திருச்சி நகரில் மறைமலை அடிகள், திரு.வி.க. உட்பட 500-க்கும் மேற்பட்ட தமிழறிஞர்கள் கூடி பல விதமான ஆதாரங்களைப் பரிசீலனை செய்து வைகாசி அனுசமே வள்ளுவர் பிறந்த தினம் என உறுதிப்படுத்தினர்.

பின்னர் 1955-ல் மீண்டும் தமிழறிஞர்கள் கூடி வைகாசி அனுச நட்சத்திரதில் அன்றே வள்ளுவர் பிறந்த தினம் என வலியுறுத்தினர்.

தமிழறிஞர்களின் வற்புறுத்தலைத் தொடர்ந்து, 1965-ல் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சராக இருந்த எம்.பக்தவத்சலம், வைகாசி அனுச நட்சத்திரத்தையே வள்ளுவரின் பிறந்த தினம் என அரசாணை பிறப்பித்ததுடன், அன்றைய தினத்தையே அவரது பிறந்த தினமாகக் கொண்டாடும்படி அறிவித்து, அந்தத் தினத்தை அரச விடுமுறை தினமாகவும் பிரகடனம் செய்தார்.



ஆனால் 1971-ல் தமிழகத்தின் முதல்வராக வந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி ஒரு புதிய ஆணையைப் பிறப்பித்து, தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் வரும் மாட்டுப் பொங்கல் தினத்தையே வள்ளுவர் பிறந்த நாளாகக் கொண்டாட வேண்டும் என அறிவித்தார். ஏன் அப்படி கருணாநிதி அறிவித்தார் என்பதற்கு இன்றுவரை அவரோ, வேறு எவருமோ காரணம் எதுவும் சொல்லவில்லை.(தமிழர்கள் சித்திரை மாதத்தில் கொண்டாடி வரும் புத்தாண்டையும் தைப்பொங்கல் தினத்தன்று கொண்டாட வேண்டும் எனவும் கூறி கருணாநிதி ஒரு சர்ச்சையை உருவாக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது) ஆனாலும் அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த அனைத்து தமிழக அரசுகளும் மாட்டுப் பொங்கல் தினத்தையே வள்ளுவர் பிறந்த நாளாகக் கொண்டாடி வருகின்றன.

இந்த நிலைமையில் இந்தியாவின் அனைத்துப் பாடசாலைகளிலும் வள்ளுவர் பிறந்த தினத்தைக் கொண்டாட மத்திய அரசு தீர்மானித்துள்ள நிலையில், தமிழ் அறிஞர்களும் பக்தவத்சலம் அரசும் அறிவித்த தினத்தையா அல்லது கருணாநிதி அறிவித்த தினத்தையா வள்ளுவர் பிறந்த தினமாக கொண்டாடுவது என்ற சர்ச்சை இப்பொழுது உருவாகியுள்ளது.

சேதுபந்தனன்

இது ஒருபுறமிருக்க, வள்ளுவரின் அநேகமான சிலைகள், படங்கள் என்பனவற்றில் அவர் தாடியுடன் காணப்படுவதால், அவர் தாடி வைத்திருந்தாரா என்ற சர்ச்சையும் சில காலத்துக்கு முன்னர் உருவானது. ஆனால் 1973 – 74-ம் ஆண்டுகளில் மயிலை திருவள்ளுவர் கோயில் வளாகத்தில் நடாத்திய அகழ்வாராய்ச்சியின் போது, அவரது உருவச் சிலை ஒன்று கிடைத்தது. 14-ம் நூற்றாண்டைச் சேர்ந்த அந்தச் சிலையில் வள்ளுவர் தாடியுடன் காணப்படுவதால் அவரது தாடி பற்றிய சர்ச்சை அத்துடன் முடிவுக்கு வந்தது.

இன்னொரு பக்கம் வள்ளுவர் எந்தச் சாதியைச் சேர்ந்தவர் என்ற சர்ச்சையும் சில காலத்துக்கு முன்னர் உருவாகியது. இதைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் ஜோதி சாஸ்திரத்தில் வல்லுனர்களான வள்ளுவப் பண்டாரம் என்ற சமூகத்தையே வள்ளுவர் சேர்ந்தவர் என்ற பலமான ஒரு கருத்து தமிழகத்தில் நீண்டகாலமாக இருந்து வருகிறது.

ஆனால் இலங்கையின் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினர் வள்ளுவர் தமது சாதியைச் சேர்ந்தவர் எனக்கூறி, அவரது பெயரில் 'திருவள்ளுவர் மகாசபை' என்ற

பெயரில் பொதுநல அமைப்புகளையும் சில பகுதிகளில் நடாத்தி வருகின்றனர்.

வள்ளுவரின் சாதி எது என்பது பற்றி தமிழகத்திலும் இலங்கையிலும் நிலவும் கருத்துக்கள் பற்றி ஆராய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாக இதுவரை தகவல்கள் இல்லை.

எது எப்படியானாலும் வள்ளுவர் பிறந்த தினத்தை அகில இந்தியாவிலும் உள்ள பாடசாலைகளில் கொண்டாட மத்திய அரசு எடுத்த முடிவு, ஒரு தமிழ் புலவன் பற்றி கோடிக்கணக்கான இந்தியக் குழந்தைகள் அறிந்து கொள்வதற்கு வழி சமைத்துள்ளதுடன், தமிழ் மக்களுக்குக் கிடைத்த ஒரு பெருமையுமாகும் என்பதில் சந்தேகம் இல்லை. *

உன் சொற்களைக் கொண்டு
உன் உணர்ச்சிகள் மதிக்கப்படும்.

உன் உணர்ச்சிகளைக் கொண்டே
உன் செயல்கள் மதிக்கப்படும்.

உன் செயல்களைக் கொண்டே
உன் வாழ்க்கை மதிக்கப்படும்.

**– சோக்ரட்டீஸ்**

"ஏங்கல்ஸ் மட்டும் தன்னலமறுப்புடன் எப்போதும் பண உதவி செய்து கொண்டே இருந்திராவிட்டால் மார்க்ஸ் மூலதனம் என்ற நூலை எழுதி முடித்திருக்க முடியாது என்பது மட்டுமல்ல, தவிர்க்க முடியாதபடி அவர் வறுமையால் மடிந்திருப்பார்"

**– லெனின்**

"அவர் ஒரு உண்மையான கலைக்களஞ்சியம். பகலிலும் இரவிலும் எந்நேரத்திலும், எந்த ஒரு மனநிலையிலும் வேலை செய்யும் வல்லமை படைத்தவர். அசுர வேகத்தில் கிரகித்து எழுதக்கூடியவர்."

**ஏங்கல்ஸ் பற்றி மார்க்ஸ் கூறிய வார்த்தைகள்**

*சரியானது எது என்று உணர்ந்த பிறகும் அதைச் செய்யாமல் இருப்பதுதான் மகா கோழைத்தனம்!*

**– கன்பூசியஸ்**

# கனடாவின் மிக மோசமான இனவாத நகரம்!

**க**னடாவின் மனிரோபா (Manitoba) மாகாணத்தின் தலைநகரான வின்னிபெக் (Winnibeg) நகரமே கனடாவின் மிக மோசமான இனவாதம் உள்ள நகரம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கனடாவின் பிரசித்திபெற்ற தேசிய சஞ்சிகையான 'மக்லீன்ஸ்' (Macleans) சமீபத்தில் வெளியிட்ட முகப்புக் கட்டுரை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி அம்மாநகரத்தில் முதன்முதலாக Metis (இந்த இனம் கனடாவின் First Nations எனப்படும் பூர்வகுடி மக்களும் ஐரோப்பியர்களும் கலந்த ஒரு இனம்) இனத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட முதல்வரான பிறியன் போவ்மான் (Brian Bowman) கவலையுடன் கருத்துத் தெரிவிக்கையில், வினிபெக் நகரம் இனவாதப் பிரச்சினையை எதிர்நோக்குவதை ஏற்றுக்கொண்டார்.

வின்னிபெக் நகரில் பூர்வகுடி மக்களுக்கும் அல்லாதவர்களுக்கும் இடையில் மிகப்பெரும் இடைவெளி நிலவுவதை சுட்டிக்காட்டிய மக்லீன்ஸ் சஞ்சிகை, கடந்த ஓகஸ்டில் அங்குள்ள சிவப்பு ஆற்றில் பொலித்தீனால் சுற்றி வீசப்பட்டிருந்த 15 வயதான ரீனா ஃபொன்ரெய்ன் (Tina Fontaine) என்பவரின் இறந்துபோன உடல் பற்றியும் குறிப்பிட்டிருந்தது.

இதேநேரத்தில் 2008இல் அங்குள்ள வைத்தியசாலை ஒன்றின் அவசர சிகிச்சைப் பிரிவில் 34 மணி நேரமாகக் காத்திருந்து இறந்துபோன இரண்டு கால்களுமில்லாத (Double-Amputee) பூர்வகுடி இனத்தைச் சேர்ந்த பிறியன் சின்கிளேயர் (Brian Sinclair) என்பவரின் மரணம் சம்பந்தமான விசாரணை அறிக்கையும் சமீபத்தில்தான் வந்திருந்தது.

மக்லீன்ஸ் சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரை சம்பந்தமாக வின்னிபெக் நகரத்தின் உயர் அதிகாரிகள் எல்லோருமே அக்கறை செலுத்தியிருக்கின்றனர்.

இதுபற்றி கருத்து வெளியிட்ட மாநகர முதல்வர் போவ்மன் "வின்னிபெக்கில் நாம் இனவாதத்தை வைத்திருக்கிறோம். அறிவீனம், குரோதம், சகிப்புத்தன்மையின்மை, இனவாதம் எங்கும் இருக்கிறது. வின்னிபெக்கிற்கு ஒரு கடமை இருக்கிறது. இந்தக் கப்பலை நாங்கள் எல்லோரும் இணைந்து மறுபக்கமாகத் திருப்பி மக்கள் உறவு கொண்டாடும் வகையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்" என்றார்.

"அதன் அர்த்தம் காத்திரமான நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் பூர்வகுடி இனத் தலைவர்களுடன் திறந்த பேச்சுவார்த்தை நடாத்தப்பட வேண்டும் என்பதாகும்" எனவும் அவர் குறிப்பிட்டார்.

MACLEAN'S

இந்த விவகாரம் குறித்து கருத்து வெளியிட்ட மனிரோபா பூர்வகுடி இன தலைவர்கள் சபையின் உயர் தலைவரான டெரிக் நெபினக் (Derek Nepinak) "தொடர்புகளுக்கான மார்க்கங்ளைத் திறப்பது அடிப்படையானது. ஆனால் இனவாதத்துடன் போராடுவது என்பது மாபெரும் சவாலானது" என எச்சரிக்கையுடன் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில், "நான் நிச்சயமாகக் கூறுவேன், சில மக்கள் உணவகங்களிலோ அல்லது வீதிகளிலோ இனவாத அனுபவங்களை நிச்சயமாகப் பெற்றிருப்பர்" என்றார்.

வின்னிபெக்கின் தலைமைப் பொலிஸ் அதிகாரியான – இவர் ஒரு கறுப்பு இனத்தவர் – டெவொன் கிளுனிஸ் (Devon Clunis) கருத்து தெரிவிக்கையில், வின்னிபெக் மட்டும்தான் இனவாதத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நகரம் எனத் தாம் நம்பவில்லை எனவும், கனடா முழுவதும் இனவாதம் இருக்கிறது எனவும் கூறினார். இது "மனித நிலைமையின் ஒரு பகுதி" எனவும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், "எமது நகரத்தின் சம்பந்தப்பட்ட இனங்களுக்கிடையில் ஒரு கிரமமான கருத்தாடலைச் செய்ய வேண்டிய தேவை எமக்கு உள்ளது. இதை இன்று யார் ஆரம்பிப்பது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும்" எனக் கூறினார்.

**–சுலோசனா**

# தமிழக ஆளுமைகள் இருவரின் மறைவு

அண்மையில் தமிழகத்தில் அரை நூற்றாண்டு காலம் ஆதிக்கம் செலுத்திய இரண்டு ஆளுமைகள் காலமாகியுள்ளனர்.

ஒருவர் பிரபல நாடக — திரைப்பட — சின்னத்திரை நெறியாளர் கே.பாலசந்தர். சுமார் 50 வருட காலம் இத்துறைகளில் செயற்பட்ட பாலச்சந்தர் 101 திரைப்படங்களை நெறியாள்கை செய்ததுடன், கமலகாசன், ரஜனிகாந் உட்பட பல பிரபல நடிகர் நடிகைகளை அறிமுகம் செய்தவர். புராணக் கதைகளிலும், இராசா ராணிக் கதைகளிலும், ஜமின்தார் கதைகளிலும் மூழ்கியிருந்த தமிழ் சினிமாவை மத்தியதர மக்களின் பிரச்சினைகளைச் சொல்லும் ஊடகமாக மாற்றியதில் பாலச்சந்தர் பெருவெற்றி கண்டார்.



(கே.பாலச்சந்தர் 1930 – 2014)

மற்றவர் ஆனந்த விகடன் குழும இதழ்களின் தலைவர் எஸ்.பாலசுப்பிரமணியன். பிரபல்யமிக்க எஸ்.எஸ்.வாசனின் மகனான இவரும் சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக பத்திரிகைத்துறையில் ஆளுமை செலுத்திய ஒருவர். ஒரு கேலிச் சித்திரத்துக்காக எம்.ஜி.ஆரின் தமிழக அரசால் தண்டிக்கப்பட்டு மன்னிப்புக் கேட்க மறுத்து சிறை சென்று இறுதியில் தமிழக அரசைப் பணிய வைத்தவர்.



(எஸ்.பாலசுப்பிரமணியன். 1935 – 2014)

இந்த இருவரும் ஏதோ ஒருவகையில் கடந்த 50 ஆண்டுகளாக தமிழக மக்களினதும், உலகத் தமிழர்களினதும் எண்ணங்கள் மீது ஆதிக்கம் செலுத்தியவர்கள். *

# சமூக அக்கறையுள்ள அதிபரின் பிரிவு



(1935 — 2014)

சமூக சேவகர், கல்வியாளர், சிறந்த நிர்வாகி, கனெக்ஸ் என்று எல்லோராலும் விழிக்கப்பட்ட, அதிபர் பொ.கனகசபாபதி 24.12.2014 அன்று ரொரண்டோவில் காலமாகினார். கடந்த கால் நூற்றாண்டு காலமாக, கனடாவின் ரொரண்டோ மாநகரில் இன்றைய விழாவில் அதிபர் பேசுகிறார் என்று யாராவது கூறினால், அவர் வேறுயாருமல்ல, கனகசபாபதி அவர்களேயென எவரும் கூறிவிடுவர். அந்தளவிற்கு ரொரண்டோ தமிழர்கள் அதிபர் – பேச்சாளர் என்றால் இவரை மாத்திரமே அறிந்திருந்தார்கள்.

சண்டிலிப்பாயில் பிறந்தவர், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்வி பயின்றவர், சென்னை கிறிஸ்துவக் கல்லூரி விலங்கியல் சிறப்புப்பட்டதாரி, ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்கள் பரிந்துரைத்து தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் முதல் ஆசிரியப்பணி, ஏழாலை மத்திய மகாவித்தியாலத்திலும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியிலும் மகாஜனாக் கல்லூரியிலும் அதிபர், நைஜீரியாவில் விவசாயக்கல்வி அதிகாரி, ரொரண்டோவில் பல் கலாச்சார ஆலோசகர், எழுத்தாளர், இப்படியாக இவர் வாழ்க்கைப் பாதையை சுருக்கமாக குறிப்பிடலாம். இலங்கையில் 45 வயது வரை மாத்திரமே ஆசிரிய – அதிபர் பணி புரிந்த இவர், விலங்கியல் கல்வியை கற்பிப்பதில் மிகச்சிறந்தவர். மணிமாறன் கதைகள் – 1,2, பெற்றோர் – பிள்ளை உறவு, திறவு கோல், மனம் எங்கே போகிறது?, மரம் – மாந்தர் – மிருகம், எம்மை வாழவைத்தவர்கள் போன்ற நூல்களின் ஆசிரியரும் இவர்.

1971 இலிருந்து 1976 வரை இவர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் அதிபராக இருந்தார். வள்ளல் மழவராயர் அவர்களால் நிறுவப்பட்ட இலங்கையின் இந்த முதல் இலவசப் பாடசாலைக்கு ஒரு தர்மகர்த்தா சபை இருந்தது. இந்த கல்லூரிக்கு அடித்தளமிட்ட தினத்தில், அருகே உள்ள சோமஸ்கந்தர் சிலை பாடசாலைக்கு கொண்டுவரப்பட்டு அன்னதானம் வழங்கப்படும். 1972 இல் அதிபர் இக்கல்லூரியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினை சேர்ந்த ஒரு மாணவனை சேர்த்தார். அப்போது தர்மகர்த்தா சபையை சேர்ந்தவர் ஒருவர் ‘பாடசாலை தீட்டுப்பட்டு விட்டது, இனிமேல் சோமஸ்கந்தர் பாடசாலைக்கு கொண்டு வரப்பட மாட்டார்’ என்றார் அதிபரிடம். அதிபரோ சற்றும் பணியாமல் ‘உங்கள் விருப்பம் அதுவாயின் அப்படியே செய்யுங்கள்’ என்று விட்டார். அதன் பின்னர் மழவராயரின் பிறந்த திகதியை பாடசாலையின் ‘நிறுவியவர் தினம்’ என கொண்டாட ஆரம்பித்து வைத்தார்.

4 வருடங்களே (1976 – 79) மகாஜனாக் கல்லூரியில் அதிபராக இருந்தார். கல்லூரியை உன்னத நிலைக்கு இட்டுச் சென்ற இவர், அன்றைய ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் பழிவாங்கல் நோக்கத்தைக் கொண்ட இடமாற்ற உத்தரவு, நெருக்கடிகள் காரணமாக 1980 இல் அதிபர் பதவியை துறந்து நைஜீரியா பயணமானார். *

முன்பக்கத்தொடர்ச்சி...

பாராளுமன்றத்தைக் கேலிக்குள்ளாக்கும் வகையில் அதே நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் அவர் மீண்டும் பிரதம நீதியரசர் ஆக்கப்பட்டார். இதேபோலத்தான் புதிய பிரதம நீதியரசராக சிறீபவனை நியமிப்பதற்கு முன்னர், பதவியில் இருந்த நீதியரசர் மொகான் பீரிஸ் அவர்களை சட்டபூர்வமான வழிமுறைகளைப் பின்பற்றாது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி எதேச்சாதிகாரத்தனமாகப் பதவி நீக்கம் செய்ததின் மூலம் புதிய அரசு நீதித்துறையை கேலிக்கூத்தாக்கி உள்ளது.

அதேபோல முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகவின் பதவிகள், பதக்கங்கள் பறிக்கப்பட்ட விடயத்திலும் பலருக்கு கருத்து வித்தியாசம் இருந்தபோதிலும், இராணுவ நீதிமன்றத்தின் விசாரணைப்படியே அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவர் விடயத்திலும் சட்டபூர்வமான வழிமுறைகளை நாடாது நிறைவேற்று அதிகாரத்தின் மூலமே இழப்பீடு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இவற்றைப் பார்க்கும்போது புதிய ஆட்சியாளர்கள் மக்களுக்குக் கொடுத்த "நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவோம்" என்ற வாக்குறுதி வெறும் ஏமாற்றுப் பேச்சா? என்ற ஐயம் மக்கள் மத்தியில் ஏற்படுவது இயல்பானது.

இது ஒருபுறமிருக்க, இது ஒரு சிறுபான்மை அரசாங்கம் என்பதை, 225 அங்கத்தவர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் உள்நாட்டு அமைச்சர் ஜோன் அமரதுங்க மீது எதிர்க்கட்சி சமர்ப்பித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் 114 பேர் கையெழுத்து இட்டதன் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது. அத்துடன் பாராளுமன்றம் எந்த நேரமும் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் ஒன்று நடாத்தப்படலாம் என ஜனாதிபதியும் பிரதமரும் கூறுவதால், இந்த அரசாங்கம் ஒரு தற்காலிக காபந்து அரசாங்கம் என்பதும் உறுதிப்பட்டுள்ளது.

பொதுவாக காபந்து அரசாங்கங்கள் நாட்டின் பிரதான விடயங்களில் முடிவு எடுக்கும் வழமை நடைமுறையில் இல்லை. அப்படியிருக்க, பல முக்கியமான விடயங்களில் இந்த தற்காலிக சிறுபான்மை அரசாங்கம் தன்னிச்சையாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. பல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நிதி நிறுவனங்கள், ஊடக அமைப்புகள், பொலிஸ் மற்றும் முப்படைகள், மாகாண ஆளுநர்கள், மாகாணசபைச் செயலாளர்கள், வெளிநாட்டு இராஜதந்திரச் சேவை போன்ற பல துறைகளில் அதிரடியாக மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

அதுமட்டுமின்றி, இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து நெருக்கடியான நேரங்களில் தன்னலமற்ற உதவிகள் செய்து வந்த, உலகப் பொருளாதாரத்திலும் வலிமையிலும் மிக வேகமாக முன்னேறிச் செல்லும் சீனாவுடனான ஒப்பந்தங்களைப் பற்றி அவதூறு பரப்பி அந்த நாட்டை அவமானப்படுத்தவும், பகைக்கவும் இன்றைய ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.க அரசு முயற்சிக்கிறது.

தேர்தல் நடைபெற்று முடிந்த நாளிலிருந்து முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு வாக்களித்தவர்களையும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளர்களையும் ஐ.தே.க காடையர்கள் தாக்குவதும், அரசாங்கமே அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் தொடர்கதையாக நடைபெறுகின்றது. கடந்த 20 வருடங்களாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பதவியில் இருந்த காலங்களில் ஜனாதிபதி தேர்தல்கள், பாராளுமன்றத் தேர்தல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் எனப் பல நடந்தபோதும், தொடர்ந்து தோல்வியைத் தழுவிவந்த ஐ.தே.கவினர் மீது இவ்வாறான தாக்குதல்களையோ, பழிவாங்கல்களையோ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1977இல் அரசியல் குள்ளநரியும் சகுனியுமான ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக்கு வந்ததும் எப்படி எதிர்க்கட்சிகளை அடித்து நொருக்கி முடமாக்கினாரோ, அதே அடிச்சுவட்டையே அவரது மருமகனும், இன்றைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவும் செய்ய முயற்சிக்கின்றாரோ என எண்ணத் தோன்றுகிறது.

போதாதிற்கு, விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் பாராளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் அவரது ஆதரவாளர்களும் போட்டியிடாமல் தடுப்பதற்காக, ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட அன்று நள்ளிரவில் மகிந்தவும் அவரது சகாக்களும் 'இராணுவச்சதி' ஒன்றுக்கு முயற்சித்தார்கள் என்ற பிரச்சாரம் முடுக்கி விடப்பட்டுள்ளதுடன், அவர்கள் பலர் மீது லஞ்ச மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தவும் முயற்சிக்கப்படுகிறது. அத்துடன் மகிந்தவும் அவரது குடும்பமும் ஈராக்கின் சதாம் ஹூசேன் போல, லிபியாவின் கடாபி போல, எகிப்தின் முபாரக் போல ஆடம்பர வாழ்வு வாழ்ந்தார்கள்.

எனவும் அவர்கள் மீது பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு, அவர்களை மக்கள் மத்தியில் செல்வாக்கிழக்க வைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த ஜனநாயக விரோத நடவடிக்கைகள் எல்லாம் 'நல்லாட்சி'யின் பெயரால் நடைபெறுவதுதான் மிகவும் வேதனையானதும், வேடிக்கையானதுமான விடயம். இந்த அரசாங்கம் மகிந்தவின் அரசாங்கத்தை விட நல்லதொரு ஆட்சியை வழங்கும் என எதிர்பார்த்து வாக்களித்த மக்களுக்கு மிகக் குறுகிய நாட்களிலேயே திகைத்துப் போகும் அளவுக்கு அரசாங்கத்தின் மக்கள் விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகள் அமைந்துள்ளன. அதன் காரணமாக தேர்தல் நடந்து ஒரு மாதம் கழியுமுன்னரே "தெரியத்தனமாகத் தவறு செய்துவிட்டோம்" என்ற மக்களின் முணுமுணுப்பைக் கேட்க முடிகிறது.

எனவே மக்கள்தான் இந்த விடயத்தில் சிந்தித்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். முதலாவது ஒரு தவறை நிவர்த்தி செய்ய இன்னொரு தவறு செய்வதை நிறுத்த வேண்டும். அதற்கு முன்னர் எங்கே தவறிழைத்தோம் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இப்பொழுது உள்ள ஒரே வழியும், பரிகாரமும் முன்னர் இழைத்த தவறைத் திருத்துவதற்கு அடுத்த பொதுத்தேர்தலை நன்கு பயன்படுத்துவதுதான். மக்களுக்கு இதைவிட்டால் வேறு வழியில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், அவர்களது அடிப்படைப் பிரச்சினைகளுக்கோ அல்லது அன்றாடப் பிரச்சினைகளுக்கோ எந்தவிதமான தீர்வையும் முன்வைக்காத இன்றைய ஜனாதிபதியை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் தானும் ஆதரித்து, தமிழ்மக்களையும் ஆதரிக்க வைத்துத் தங்கள் தலையில் தாங்களே மண் அள்ளிப்போட்டது குறித்து புதிதாக நாம் எதையும் கூறுவதற்கில்லை. ஏனெனில் நாய் வாலை ஒருபோதும் நிமிர்த்த முடியாது என்பது எங்கள் எல்லோருக்கும் தெரிந்த உண்மை. *

# இது இப்படி நடந்திருந்தால்....?

தனது இரண்டாவது பதவிக்காலத்தில் இரண்டு வருடங்கள் இன்னமும் இருக்கக்கூடியதாக அவசரப்பட்டு ஜனாதிபதித் தேர்தலை நடாத்தியது எவ்வளவு தவறு என்பதை மகிந்த ராஜபக்ச தனது தோ்தலின் பின்னர் நிச்சயமாக உணர்ந்திருப்பார்.

இடதுசாரிக் கட்சிகள் உட்பட அவரது சொந்தக் கட்சியினர் கூட எடுத்துச் சொல்லியும் அவர் ஒருவரது சொல்லையும் கேட்காமல் ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடாத்தப் புறப்பட்டு தலை குப்புற விழுந்து கிடக்கிறார். இதைத்தான் நமது முன்னோர்கள் “கெடுகுடி சொல் கேளாது” என்று சொன்னார்களோ என்னவோ?

தனது வெற்றியில் இருந்த அளவுக்கதிகமான நம்பிக்கையாலும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பலம் வாய்ந்த சக்திகள் தனக்கு எதிராகத் திரண்டிருப்பதைப் புரிந்து கொள்ளாமலும், சோதிடர்களின் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட மூடத்தனமான எதிர்வு கூறல்களாலும், அவர் தோல்வியைத் தழுவவேண்டி வந்துவிட்டது. இந்த நிலையைத்தான் “ஆனைக்கும் அடி சறுக்கும்” என்ற இன்னொரு முதுமொழி நினைவுக்குக் கொண்டு வருகிறது.

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதித் தோதலில் தோற்றாலும், தனது அவசரத்தனமான நடவடிக்கை மூலம் மறுபக்கத்தில் நாட்டு மக்களுக்கு சில மனிதர்களின் உண்மையான சுயரூபத்தை அம்பலப்படுத்தியும் இருக்கிறார். அந்தவகையில் தான் தோற்றும் நாட்டுக்கு நல்லதைச் செய்திருக்கிறார். அவை என்னவென்று ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

- முதல்நாள் இரவு மகிந்தவுடன் ஒன்றாக இருந்து அலரி மாளிகையில் முட்டை அப்பம் சாப்பிட்டவர் அடுத்த நாள் எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படுகிறார். மகிந்த தேர்தலை அறிவிக்காது இருந்திருப்பின் அந்த மைத்திரிபால சிறிசேன என்ற நபர் 10 வருடங்களாக இருந்தது போல மகிந்த அரசில் ஒரு முக்கிய அமைச்சராகவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளராகவும் வலம் வந்து கொண்டிருந்திருப்பார்.
- அதுபோல மகிந்த தேர்தலை அறிவிக்காது விட்டிருந்தால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்பாராது கிடைத்த இந்தப் பிரதமர் பதவி கிடைத்திருக்காது. அவரது நேரம் அவரது ஐ.தே.கவுக்குள் நடக்கும் குடுமிபிடிச் சண்டையில் கழிந்திருக்கும்.
- அதேபோல ‘9 வருடங்களாக நாட்டையும் கட்சியையும் காப்பாற்றுவதற்காகக் காத்திருந்த’ முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இன்னமும் காத்துக்கொண்டுதான் இருந்திருப்பார்.
- ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன் போன்றவர்களுக்குக் கூட மகிந்த தேர்தலை அறிவிக்காது விட்டிருந்தால், தமது சமூகத்தின் நலன்கள் பற்றித் திடீரெனத் தோன்றிய உணர்வு தோன்றாமல் மந்திரிப் பதவிகளில் ஒட்டியிருந்து கொண்டு சுகபோகம் அனுபவித்திருப்பார்கள்.
- 15 வருடங்களுக்கும் மேலாக புலிகளின் கொலைவெறித் தாக்குதலுக்கு அஞ்சி கொழும்புக்கு ஓடி வந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கங்களின் பாதுகாப்பிலும், நிதி உதவியிலும் வாழ்ந்து வந்த முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்கள், வீ.ஆனந்தசங்கரி போன்ற ‘மிதவாத’ அரசியல்வாதிகள் எல்லோருக்கும் திடீரெனத் தோன்றிய ஜனநாயக ஞானோதயம் மகிந்த தேர்தலை அறிவிக்காது விட்டிருந்தால் ஒருபோதும் தோன்றியே இருக்காது.
- வலதுசாரியாக இருந்தவர்களும் ‘இடதுசாரி’யாக இருந்தவர்களும், புலி ஆதரவாளர்களாக இருந்தவர்களும் எதிர்ப்பாளர்களாக இருந்தவர்களும் என, எதிரும் புதிருமாக போலித்தனமாகக் காட்சி அளித்தவர்களை மகிந்தவின் தேர்தல் அறிவிப்பு ஒரே இரவில் கைகோர்க்க வைத்த பெருமையும் அவரையே சாரும்.
- மனித உரிமை அமைப்புகள், அரச சார்பற்ற அமைப்புகள் என்ற போர்வையில் அந்நியப் பணத்தில் ‘பக்கம் சாராது’ மக்களுக்குச் ‘சேவை’ செய்தவர்களின் முகத்திரைகளையும் மகிந்த தேர்தல் அறிவிப்பு மூலம் கிழித்து எறிந்திருக்கிறார்.
- அதேபோல தினசரி நூற்றுக்கணக்கில் மகிந்த அரசின் அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்கெதிராக ஊழல் குற்றச்சாட்டுகளை முறைப்பாடு செய்பவர்கள் தொடர்ந்தும் முகவரியில்லாமல் வாழ்ந்திருப்பார்கள்.
- தமிழ் தேசியக் கூட்டமைப்பு சம்பந்தன் கூட மகிந்த அரசு தொடர்ந்திருந்தால் இலங்கையின் இந்த வருட சுதந்திர தினத்தன்று பாடியது போன்று “ஆனந்த சுதந்திரம் வந்ததென்று..” பள்ளுப்பாட்டு பாடாமல், அந்தத் தினத்தை வழமையானப் பிரகாரம் தமிழர் துக்க நாளாக அனுஸ்டித்திருப்பார்.
- அமெரிக்கா கூட இந்த வருட மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் சமர்ப்பிக்க உத்தேசித்திருந்த இன்னொரு கடுமையான தீர்மானத்தை நிறுத்தி வைப்பது அல்லது அதன் சாரத்தை மென்மைப்படுத்துவது குறித்து ஆலோசித்திருக்காது.

இப்படி இப்படி பலருடைய உள்ளங்களுக்குள் பதுங்கியிருந்த மிருகங்களை ஜனாதிபதித் தேர்தலை அறிவித்ததின் மூலம் மகிந்த ‘வெட்டை’க்கு கலைத்து விட்டிருக்கிறார். அதன் மூலம் தான் தோற்றாலும் இலங்கை மக்களுக்கு இந்த ஆசாடபூதிகளை இனம் காட்டி, நாட்டு மக்களுக்குப் பெரும் சேவையொன்றைச் செய்திருக்கிறார்.

இந்தத் தேர்தல் அறிவிப்பு வரவில்லையாயின் இந்த ‘மனிதர்கள்’ எல்லாம் வழமைபோல பல்வேறு முகமூடிகளுடன் சமூகத்தில் வழமை போல உலவி வந்திருப்பார்கள்.

- அசுவத்தாமன்